பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 31 புதன்கிழமை (13-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 167

## ராணுவ முகாம்கள் மீது புலிகள் தொடர்ந்து அதிரடி

# 12 நாட்களில் 6 ஆவது பெருந்தாக்கு; செட்டிகுளத்தில் 10 படையினர் பலி!

## ஆறு காவல் அரண்களும் தகர்ப்பு

யாழ்ப்பாணம், மே 13

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை உத்வேகத்துடன் முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

இம்மாதத்தில் — கடந்த 12 நாட்களில் — ஆறாவது பெருந்தாக்குதல் நடவடிக்கை நேற்று அதிகாலை செட்டிகுளம் அருகே நடத்தப் பட்டது.

இந்தத் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; படையினரின் ஆறு காவல் அரண்கள் தகர்க்கப்பட்டன; 13 நவீன துப்பாக்கிகள் உட்பட பல இராணுவத் தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

செட்டிகுளம் அருகே முதலிக்குட்டிப் பகுதியில் அமைந்திருந்த காவலரண்கள் மீதே நேற்று அதிகாலை 2-55 மணியளவில் இந்த அதிவேக அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஐந்து நிமிட நேரம் நீடித்த இந்தத் தாக்குதலில் 10 படையினர் அந்த இடத்திலேயே பலியானார்கள். எஞ்சியோர் காயங்களுடன் ஓடித் தப்பினர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் மல்வத்து ஓயாவுக்கும் ஜயபலத்கமவுக்கும் இடையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-எ-3-10-15-165]

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மே 13

நேற்று அதிகாலை செட்டிகுளம் பகுதியில் இடம் பெற்ற தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி-56 ரகத் துப்பாக்கி - 7
- ★ ரி-81 ரகத் துப்பாக்கி - 1
- ★ எஸ். எல். ஆர். துப்பாக்கி - 3
- ★ 303 ரக துப்பாக்கி - 2
- ★ ரி-56 லிங்குகள் - 25
- ★ ரி-81 லிங்குகள் - 7
- ★ எஸ். எல். ஆர் லிங்குகள் - 9
- ★ 303 ரக லிங்குகள் - 1
- ★ நடுத்தர ரவைகள் - 1,250
- ★ நேட்டோ ரவைகள் -200
- ★ 303 ரக ரவைகள் - 70
- ★ ஜே ஆர். கிரனேட் - 2
- ★ ரி என். ரி கைக்குண்டு - 5
- ★ பொறி குண்டுகள் 4
- ★ ரி 81 ரக ஷெல் - 1
- ★ வெடிக்க வைக்கும் கருவி - 2
- ★ சப்பாத்து - 7 சோடி
- ★ ரவைதாங்கி அணிகள் - 14
- ★ தலைக்கவசம் - 4

[உ-3-165]

## வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மனித உரிமை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 13

அரச படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு வடக்கு - கிழக்கில் மனித உரிமை காப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மனித உரிமைகள் குழு அடுத்த மாதத்தில் இத்தகைய நிலையங்களை அமைக்க இருப்பதாக அறியவந்துள்ளது

வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவுள்ள மனித உரிமைகள் காப்பு நிலையங்களுக்கு நோர்வே நாடு பொறுப்பாக இருக்கும்.

கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த நோர்வே நாட்டின் அரசாங்கப் பிரதிநிதிகள் இத்தகவலை அங்கு வைத்து வெளியிட்டார்கள் என்று உதயனுக்குத் தெரிய வந்துள்ளது.

முதலாவது மனித உரிமைகள் காப்பு நிலையம் மட்டக்களப்பில் அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து திருகோணமலை, அம்பாறை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அவை நிறுவப்படும்.

பிரஸ்தாப மாவட்டங்களிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மட்டுமே மனித உரிமை காப்பு நிலையங்கள் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டது.

படை அதிகாரிகள், ஊர்காவல் படையினர் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்தும்—

காணமல்போதல், கைது செய்தல், கொலை போன்றவை குறித்தும்—

இந்த நிலையங்கள் கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது [அ 3]

## குடாநாட்டு நிலைமை குறித்து தெற்கு மக்களுக்கு தெரியாது

### குருநாகல் ஆயர் கருத்து

குருநகர், மே 13

''தென்பகுதி மக்களுக்கு இங்கே நடப்பது என்ன என்பது பற்றித் தெரிவதில்லை. அரசு சொல்வதெல்லாம் அப்பட்டமான பொய் என்பது இங்கு வந்த பின்னர் தான் தெரிகிறது.''

குருநாகல் மறை மாவட்ட ஆயர் வண. ரேமன் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றத்தைப் பார்வையிட்ட பின் அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தபால் பொதிகள் இன்று வரும்

யாழ்ப்பாணம், மே 13

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் 270 தபால் பொதிகள் எடுத்து வரப்படுகின்றன.

வங்கிகளுக்கு ஒரு தொகை பணமும் இந்தக் கப்பலில் எடுத்துவரப்படுவதாக தெரிய வந்தது.

அரிசி, மா குறைவாகவும். சீனி மற்றும் சரக்குப் பொருள்கள் கூடுதலாகவும் எடுத்து வரப்படுகின்றன. [ஓ-3]

## ஆசிரிய மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மே 13

கோப்பாய் கலாசாலை ஆசிரியர் பயிலுநர்கள் நேற்று முதல் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

சம்பளத்தைப் பணமாக வழங்க மறுத்தமை, கலாசாலை வளங்கள் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமை, விடுதி மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை போன்ற பல விடயங்களை முன்வைத்தே பகிஷ்கரிப்பு இடம்பெற்று வருவதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

[ஓ-3]

## ஹெலி தாக்கு!

அளவெட்டி, மே 13

குப்பிளான், கட்டுவன், குரும்பசிட்டி, வீமன் பகுதிகளை நோக்கி நேற்று பிற்பகல் 4 மணியளவில் பரவலாக ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதிகள் மீது நேற்று அடிக்கடி ஹெலிக்கொப்டர்கள் பறந்து திரிந்ததையும் காணமுடிந்தது.

[உ-15-ரி)

## புத்தூரிலும் தாக்குதல்

புத்தூர் வண்ணாத்திப் பாலத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்களை நோக்கி ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது

வீதியில் சென்றோர் மதவுகளுக்குள் பதுங்கியும், ஓடிச்சென்று பற்றைகளுக்குள் ஒளித்தும் தப்பித்துக்கொண்டனர். (உ-15)

## ஷெல் தாக்குதல்

கீரிமலை, தச்சன்காடு முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

## 2 மீனவர் கைது

யாழ்ப்பாணம், மே 13

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரமடைந்துள்ளதாகவும் —

மீன்பிடி படகுகள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாகவும் —

மீனவர்களின் வலைகள் கடற்படையினரால் அபகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-3)

## சடலம் மீட்பு

அளவெட்டி, மே 13

இணுவில் காரைக்கால் சிவன்கோவிலுக்கு அருகேயுள்ள சுடலையில் இருந்து சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் சுன்னாகம் காவல்துறையினரால் மீட்கப் பட்டது. நேற்று மாலை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இச்சடலம் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [உ-15-ரி]

## ஆயர் குழு திரும்பியது

யாழ்ப்பாணம், மே 13

யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பொன் - பவள - வெள்ளி விழாவில் பங்குபற்றுவதற்கு கொழும்பு மோற்றிராணியார் வண. நிக்கிலஸ் மார்க்ஸ் தலைமையில் வந்த ஆயர் குழு நேற்று மாலை கொழும்பு திரும்பியது. [உ-3]

## 21 க்கு முன்னர் குற்றப்பத்திரிகை

சென்னை, மே 13

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான குற்றப்பத்திரிகை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக தாக்கல் செய்யப்படும்.

இப்படி சிறப்பு புலனாய்வுப் பிரிவுத் தலைவர் எம். கார்த்திகேயன் தெரிவித்தார்.

இதுவரை தரந்த ஆதாரங்களுடன் 21 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

ஆதாரங்கள் கிடைத்தால் சந்தேகத்துக்கு இடமான மேலும் பலர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் தமிழ்நாடு-ஸ்ரீபெரும்புதூரில் கட்டப்படவிருக்கும் ராஜீவ் காந்தி நினைவு மண்டபததுக்கு பிரதமர் நரசிம்மராவ் இம்மாதம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைத் தடைசெய்தால் போராட்டம் நடத்துவோம்

## நெடுமாறன் - ராமதாஸ் அறிவிப்பு

சென்னை, மே 13

விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதிக்கப்படுமானால் அதனை எதிர்த்து தமிழ்நாட்டில் பெரும் போராட்டம் நடத்தப்போவதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பி. நெடுமாறனும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸும் அறிவித்துள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் விடுதலைப் புலிகள் மீது பழியைப் போடுவது சரியல்ல என்றும்—

விடுதலைப் புலிகளுக்கு தடை விதித்தால் அதை எதிர்த்து மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து போராடப் போவதாகவும் நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸும் இதே கருத்தையே வலியுறுத்தி உள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எல்லா வகைகளிலும் ஆதரவாக இருப்போம். அவர்களுக்காக எந்தத் தியாகமும் செய்வோம். விடுதலைப் புலிகளை மத்திய அரசு தடைசெய்தால் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம் என்று மதுரையில் நடந்த பாட்டாளி மக்கள் கட்சிப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அதன் தலைவர் திரு. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

[இ-3]

## ஜி. சி. ஈ. சாதாரண விசேட பரீட்சை 1990:
# மற்றும் சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், மே 13

கடந்த டிசம்பரில் நடைபெற்ற 1990 ஆம் ஆண்டுக்குரிய ஜி சி ஈ. சாதாரண விசேட பரீட்சையில் சில பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் கடந்த 11 ஆம் திகதி உதயனில் பிரசுரமாகி இருந்தன.

இதுவரை கிடைத்த மற்றும் சில பாடசாலைகளில் முன்னணிப் பெறுபேறுகளை இங்குதருகிறோம்.

**செங்குந்த இந்துக் கல்லூரி**
ஒருவர் — 5 டி

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**
3 பேர் — 7 டி, 8 பேர் — 6 டி, 7 பேர் — 5 டி, 13 பேர் — 4 டி.

**உடுவில் மகளிர் கல்லூரி**
ஒருவர் — 7 டி, 8 பேர் — 6 டி, 6 பேர் — 5 டி, 7பேர் 4 டி.

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி**
2 பேர் — 7டி, 3 பேர் — 6டி, 5 பேர் — 5டி, 6 பேர் — 4டி.

**தெல்லிப்பளை மகாஜனா**
7 பேர் — 6டி, 9 பேர் — 5டி, 5 பேர் — 4டி.

**சுன்னாகம் ஸ்கந்தா**
ஒருவர் — 7டி, ஒருவர் — 5டி.

**நீர்வேலி அத்தியார் இந்து**
ஒருவர் — 6டி.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
2 பேர் — 5டி, 2 பேர் — 4டி.

**அளவெட்டி அருணோதயா**
2 பேர் — 6டி, 2 பேர் — 4டி.

**மல்லாகம் ம. வி.**
ஒருவர் — 6டி, 2 பேர் — 4டி.

**சாவகச்சேரி இந்து**
9 பேர்— 6 டி, 8 பேர்— 5 டி, 14 பேர்— 4 டி.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**
ஒருவர் — 7 டி, ஒருவர்— 5 டி, 2 பேர்— 4 டி.

**சாவகச்சேரி டிறிபேர்க்**
ஒருவர்— 7 டி, ஒருவர் — 6 டி, 4 பேர்— 4 டி.

**வைத்தீஸ்வரா**
ஒருவர்— 5 டி.

**கந்தரோடை தமிழ்க்கந்தையா**
ஒருவர்— 7 டி, 2 பேர்— 6 டி, 2 பேர்— 4 டி.

**தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம. வி.**
ஒருவர் — 6 டி, ஒருவர் — 4 டி.

(இ)

## 15 ஆம் திகதி அரசாங்க விடுமுறை

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி விடுமுறை 16 ஆம் திகதி சனிக்கிழமை வருவதனால் இந்த அரசாங்க விடுமுறை வழங்கப்படுகிறது என்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

## கருத்தரங்கு

பாடசாலை முன்னிலைப் பிள்ளைகளின் தேவைகள் பற்றிய கருத்தரங்கு இன்று புதன் காலை 8-30 மணிக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

பாடசாலை முன்னிலைப் பிள்ளைகளின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் பற்றி டாக்டர் இ தெய்வேந்திரமும், போஷாக்கு நிலை குறித்து டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியனும் பாடசாலை முன்னிலைப் பிள்ளைகளின் அபிவிருத்தியில் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங் [illegible] உரை நிகழ்த்துவர்.

[இ-18]


மலிவு விற்பனை அறிவித்தல்

மலிவு விற்பனை 31 - 05 - 92 வரை நடைபெறும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

க. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
[பாரதியார் சிலைக்கு அருகாமையில்],
156, பருத்தித்துறை வீதி.
நல்லூர்.

[20956]

கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான
மாதிரி வினாவிடை நூல்

★ தமிழ்மொழி, பொது அறிவு, விவசாயம் ஆகிய மூன்று வினாத்தாள்களுக்குமான ஒரே நூல்.
★ திரு. க. குணராசாவின் வழிகாட்டலில் தயாரானது.

சொற்ப பிரதிகளே கொழும்பிலிருந்து வந்துள்ளன

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2323)

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

பட்டப்-படிப்புகள் பிரிவு

★ யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தினால் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்குப் பதிவுசெய்து கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
★ கலை முதற் தேர்வு [G. A. Q.]க்கான விண்ணப்ப முடிவு திகதி 06 - 08 - 1992. அன்றைய தினமே விரிவுரைகள் ஆரம்பமாகின்றன. விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

முதல்வர்,
கல்லூரிப் பூங்கா.

[சி-2815]

வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க. பொ. த. ப. [உ. த.] 1994

கல்வி அமைச்சின் 24 - 04 - 1984 திகதியிட்ட 2/SO/2/221 இலக்கச் சுற்று நிருபத்திற்கமைய கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

கலை: தமிழ், இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், நாடகமும் அரங்கியலும், அரச அறிவியல்.

வர்த்தகம்: கணக்கியல், வர்த்தகமும் நிதியும், பொருளியல், இந்துநாகரிகம்.

★ விடுதி வசதியும் உண்டு.

விண்ணப்ப முடிவு: 18 - 05 - 1992

- அதிபர்.

யா/வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-2299]

புனித பத்திரிசியார் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
மேதகு யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை
அவர்களின்
முப்பெருவிழா

15 - 05 - 1992 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் விழா ஆராதனைத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில் பாராட்டு வைபவமும் இடம்பெறும். பழைய மாணவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

Ref. Fr. G. A. FRANCIS JOSEPH,
President.

No. 59, St. Patrick's Road,
Jaffna.

(சி-2319)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
அடுத்த புதிய பிரிவு:
DAY CLASSES
(காலை 8மணி முதல் மாலை 3மணி வரை)

ஆரம்பம்: 14 - 05 - 1992

★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.
★ அலகு ரீதியான வினா - விடை வகுப்புகள் இலவசமாக நடைபெறும்.
★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு மணிநேரம் நடைபெறும்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-2281]

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் வெள்ளையர் வல்லிபுரம்
[மயிலிட்டி வடக்கு]

அமரத்துவம் எய்திய எனது அன்புத் தந்தை வெள்ளையர் வல்லிபுரம் அவர்களின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, நாளை [14-05 92] வியாழக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அச்செழு - நீர்வேலி வீதி [இடம் பெயர்ந்து வசித்துவரும்] இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு, எனது தந்தையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

வ. நகுலேஸ் (Rtd. Asst. S. S.- Land Surveyor, Ministry of Defence- Oman)

நீர்வேலி வீதி,
அச்செழு.

[20937]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் சுப்பிரமணியம் சிவவாகீசர்

# மணி விழா வாழ்த்து மலர் - 13-05-1992

### துர்க்கா துரந்தரி
### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
### வாழ்த்து

அறிவுப் பலமும் ஆத்மீகப் பலமும் நிரம்பப் பெற்றவர் எமது ஆலயச் செயலாளர் திரு. சு. சிவவாகீசர் அவர்கள். இன்று மணிவிழாக் காணும் இப் பெரியார் வாழ்வாங்கு வாழ்ந்து அறுபதாண்டு நிறைவை அம்பாள் திருவருளால் வாய்க்கப்பெற்றவர்.

ஆசாரமும் பண்பும் நிறைந்த நற்குடியினால் இவர் வாழ்வு தூய்மை பெற்றுத் திகழ்கின்றது. ஆளுமைமிக்க அதிபராகப் பணியாற்றிய காலம் இவர் வாழ்வில் ஒளிமிக்க பொற் காலமாகும். இதே போன்று முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது தேவஸ்தான நிர்வாகத்தை அலங்கரித்து நின்ற பெருமை இவருக்கு உண்டு.

இளமை தொட்டு சமூகப்பணிகளிலும் சீர்திருத்த நடவடிக்கைகளிலும் பெரிதும் ஈடுபட்டவர். ஆசிரிய சங்கங்களில் அங்கம் வகித்து கல்வி உலகுக்கு சேவை செய்தவர். இப்பெரியாரின் காலம் எமது தேவஸ்தானத்தின் பொற்காலமாகும். உண்மை, நேர்மை, நிதானம், ஒழுக்கம், சைவ ஆசாரம் ஆகியவை இவர்களின் குடும்பச் சொத்தாகும்.

இத்தகைய பெருமைக்குரிய இப் பெரியார் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்ந்து அறப்பணியும் அருட்பணியும் ஆற்ற வேண்டுமென்று அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.



திரு. சு. சிவவாகீசர்

### வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் வாழ்த்து

பன்னிரண்டு ஆண்டுகள் யா/வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலையின் அதிபராகவிருந்த திரு. சு. சிவவாகீசர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கும், கிராம முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்தமையை மனமாரப் பாராட்டுவதோடு, அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நாளில் அவர்களை சகல வளமும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நெருக்கடி மிகுந்த போதும்
நெஞ்சிலே கல்வியேந்தி
உருப்பட சேவை செய்த
உத்தம அதிபராகப்
பொறுப்புடன் மாணவர்க்குப்
பொழுதெலாம் கல்வியூட்டிச்
சிறப்புடன் திகழுமெங்கள்
"சிவவாகீசர்" வாழ்க!

"செந்தமிழோடுயர் சைவமும் வாழ
ஜெகமிதில் உழைத்திடுவோம்."

## வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயத்தின் வாழ்த்து

எமது அன்புக்குரிய அதிபர் திரு. சுப்பிரமணியம்சிவவாகீசர் அவர்களுக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. சிவவாகீசர் சிறந்ததோர் ஆசான்; ஆசிரியர் போற்றும் அதிபர்; பெற்றோர் மதிக்கும் சேவையாளன்.

தெல்லிப்பழையில் 1932ஆம் ஆண்டு மேமாதம் 13ஆம் திகதி பிறந்த திரு. சிவவாகீசர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் தமது கல்வியைப் பெற்று ஒரு கலைப் பட்டதாரி ஆகினார்.

திரு. சிவவாகீசர் எல்லாமாக 20 ஆண்டு காலம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், கன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணி புரிந்தார். அவர் அதிபராக வவுனிக்குளம் மகாவித்தியாலயத்திலும் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயத்திலும் 17 வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

அவர் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், பொதுச் செயலாளராகவும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினராகவும் பிரதிச் செயலாளராகவும் இருந்து சீரிய தொழிற் சங்கப் பணியாற்றினார். 1972ஆம் ஆண்டில் வடமாகாண ஆசிரியர் சங்கத்தில் பரீட்சைச் செயலாளராகவும் அவர் சிறப்புறக் கடமையாற்றினார்.

திரு. சிவவாகீசர் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா சபை செயலாளராகவும், நிர்வாகசபை பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

திரு. சிவவாகீசர் 1981 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி எமது பாடசாலையின் அதிபராகப் பதவியேற்று இவ்வாண்டு மே 12 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

அவர் அதிபராகப் பணியாற்றிய 11 ஆண்டுகளில் எமது கல்லூரி பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

நற் சேவையாளரான அதிபர் சிவவாகீசர் அவர்கள் நீடு வாழ்ந்து சைவ, தமிழ், சமூகப் பணிகள் ஆற்றி மென்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனை [வாழ்த்துவோமாக!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி மன்றத்தினர்.

[விளம்பர இல. சி-2311]

2 ஆவது பிரிவு **BITSMANS** கல்வி நிறுவனம் மாணிப்பாய்.

**O/L 92 டிசம்பர்**
**DAY CLASS**

[எமது வழமையான ஆசிரியர் குழுவினால்]

ஆரம்பம்:

**14-05-1992** வியாழன் 8-00 a.m

சி-2401]

### உப்புக் கூட்டுத்தாபனம்
## மக்கள் மயமாக்கப்பட்டது

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்
"லங்கா சோல்ட் லிமிடெட்"
என மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு இணங்கவும், வட பிராந்தியத்தில் உள்ள ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் 1990 ஆடி முதல் இயங்காமல் இருப்பதாலும், உடனடியாக அவற்றை இயங்கவைக்கும் சாத்தியங்கள் இல்லாமையாலும், 1992 ஜனவரி முதல் சம்பளங்கள் வழங்குவதில் தடங்கல்கள் இருப்பதாலும், வட பிராந்தியத்தில் உள்ள ஊழியர்கள் புலுமல்ல அறிக்கையின் பிரகாரம் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுக் கொள்ளலாம் என தலைமை அலுவலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வட பிராந்திய ஊழியர்களையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், 19-05-92 பளை, 20-05-92 முரசுமோட்டை அலுவலகங்களில் காலை 10-00 மணிக்கு ஒன்றுகூடும்படி வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இதுவரை ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும், இச் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

பிராந்திய முகாமையாளர்,
வட பிராந்தியம்,
லங்கா சோல்ட் லிமிட்டட்,
ஆனையிறவு.

[சி-2313]

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 13

நவாலி வடக்கு அட்டகிரி விஸ்வநாதப் பெருமான் தேவஸ்தான வருடாந்த சங்காபிஷேகமும், மணவாளக் கோல விழாவும் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளன. [அ]

### வெளிவாரி பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் வெளிவாரி மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி சீ ஈ உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள் கலை முதற் தேர்வு, வர்த்தக முதற் தேர்வு ஆகிய துறைகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி ஜூன் மாதம் 20 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் மட்டுமல்ல 1989 இற்கு முன்வரும் ஜி சீ. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொள்ளலாம் என யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜி சீ. ஈ. உயர்தர பரீட்சையில் கலை, வர்த்தகம் தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் சித்தி பெற்றவர்களும் யாழ். [illegible] கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### தம்பு நவரத்தினம்

தாயின் மடியில்: 19-09-1951
இறைவனடியில்: 13-04-1992

அன்பின் அருவியாய்! அறிவின் ஒளிவிளக்காய்! பண்பின் சிகரமாய்! பாசத்தின் பிறப்பிடமாய் குன்றின் ஒளியாய்! குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவர்களின் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
அம்மா, மனைவி, பிள்ளைகள், அக்கா,
தங்கைமார், தம்பி, மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள், மாமாமார்,
மாமிமார் மற்றும் குடும்பத்தினர்.

புதிய செம்மணி வீதி,
(கிருபாகரன் வீதி),
ஞானவைரவர் கோவிலடி,
கல்வியன்காடு.

[20958]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கிற்றார் விற்பனைக்கு

நல்ல தரத்தில் இரண்டு கிற்றார்கள் விற்பனைக்குண்டு. மாலை 4-30 — 6 30 இற்கு இடையில் தொடர்பு கொள்ளவும். 205 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [20963]

### தேவை

பாலர் பாடசாலையில் கற்பிக்க பாலர் பாடசாலை பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை. தகைமைகளுடன் செயலாளர்: மனோன்மணி சனசமூக நிலையம், நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் என்ற முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். [20970]

### மணமகள் தேவை

43 வயது, R. C. அரச சேவையில் உள்ள மணமகனுக்கு 35 வயதிற்கு மேற்படாத ஆசிரியை தேவை. காலை 9-00 தொடக்கம் 4-00 மணிவரை சந்திக்கலாம். புதிய மாங்கல்யா மலற்றி சேவிஸ், 361, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் [20941]

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, 7 இல் செவ்வாய் இங்கிலாந்தில் விசாவுடன் இருப்பவருக்கு செவ்வாய்க் குற்றமுள்ள, படித்த அழகான, சுமாரான உயரமுடைய 25 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் இலங்கையில் அல்லது இங்கிலாந்தில் தேவை. முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 406, C/o உதயன். [20967]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் சொல்லப்படும். விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்த்துச் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20945,

### சங்கீதம்

சங்கீதம் வினா – விடை தயாரிப்பு: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா 6முதல் 9வரை பயிலும் மாணவர்களுக்கும், சங்கீதசபை இரண்டாம் தரம் பயிலும் மாணவர்களுக்கும் பயன் தருவது நடுவுத்துருத்தி நிறுவனத்தின் வெளியீடு; கிடைக்குமிடம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [20931]

### வரலாறு A/L

வரலாறு A/L பிரத்தியேக வகுப்புக்கள், மீட்டல் வகுப்புகளுக்குத் தொடர்பு கொள்ளவும். நா. மயில்வாகனம் B. A. Hons. (Cey.) History, 36, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (20966)

### ஆண்டு – 7

''வரலாறும் சமூககல்வியும்'' செயல் நூல் ஆண்டு -7 வெளிவந்துள்ளது. அரசாங்க பாடநூலுக்கமைய மீட்டல் வினா - விடைகள் செயற்பாடுகளுக்கு விடைகள், தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் - விடைகள் யாவும் ஒருங்கே அமைந்தது. ஆக்கம்: நா. மயில்வாகனம், சென். ஜோன்ஸ் கல்லூரி. யாழ்ப்பாணம். விலை ரூபா 30/-. புத்தகசாலைகளில் பெறலாம். [20965]

### இலவச திருமண சேவை

33 வயது, அவிட்டம், இரேக்க கப்பலில் மூன்றாவது அதிகாரியாகக் கடமை ஆற்றுபவருக்கு ஏற்ற மணமகள் தேவை. தற்போது இலங்கையில் உள்ளார். து விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4851]

29வயது, பூசம், ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் விண்ணப்பிக்கலாம். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4859]

36 வயது. உத்தராடம் 1, செவ்வாய் 8, சைவ போசன மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் ஆலோசிக்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4852]

### வாடகைக்கு

தளபாடங்களுடன் கடை வாடகைக்கு உண்டு சதனி இராமநாதன், இல. 118, கோவில் வீதி, நல்லூர் [20959]

### A/L புத்தகங்கள்

உயர்தரப் பிரயோக கணிதப் பயிற்சி நூல்கள்: நிலையியல் பகுதி – I (ரூபா 20/-) காவியும் அதன் பிரயோகங்களும் (ரூபா 20/-) மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் (ரூபா 32-50/-) ஆகியவை யாழ். நகரெங்கிலும் விற்பனையாகின்றன. ஆசிரியர்: சி. துரையப்பா. (4838)

## மின் வெட்டு நீக்கம்

கொழும்பு, மே 13

தெற்கில் அமுலில் இருந்த மின்வெட்டு நீக்கப்பட்டது. நீரேந்தும் பகுதிகளில் போதியளவு மழை பெய்திருப்பதை அடுத்தே இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-த)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 16 — 08 — 1985



இறப்பு: 13 — 05 — 1991

### செல்வி றொசானி சிவபாலன்

அல்லி விழியாலும் முல்லை நகையாலும்
சொல்லினழகாலும் மெல்லநடையாலும்
பள்ளித்திறனாலும் அள்ளிமகிழ்வித்து
துள்ளி விளையாடிய றொசானி – நீ
சென்றாண்டொன்று ஆனதம்மா.

தாய், தங்கை, பேரன்,
உறவினர்.

24, முதலாம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம். [20957]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 01 — 1944



மறைவு: 13 — 05 — 1990

### அமரர் ஞானமுத்து பிரான்சிஸ்

(D. S. O. மன்னார் மாந்தை மேற்கு, ப. நோ. கூ. ச.)

பாசத்திற்கு ஓர் சகோதரனாய்
பண்பிற்கு ஓர் மைத்துனனாய்
அன்பிற்கோர் மாமனாய்
திகழ்ந்த அன்புத் தெய்வமே!
இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் இதயக் கண்ணீர் ஆறாது!

உங்கள் பிரிவால் துயருறும்;
தாய், சகோதரர்கள், மனைவி,
மாமன், மைத்துனர், மருமக்கள்,
மருமகன், உற்றார், உறவினர்கள்.

ஞானப்பிரகாசர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

## நெஞ்சத்தின் நினைவுகளில் எட்டாவது ஆண்டு

அன்னையின் மடியில்: 26 — 03 — 1959



அன்னியர் பிடியில்: 13 — 05 — 1984

### வீரவேங்கை பணக்காரன்
### மிக்கேல்பிள்ளை அமலதாஸ் (அமல்)

மார்பிலே குண்டுபட்டு – தமிழ்
மண்ணிற்கு வித்திட்ட
மாதங்கள் தொண்ணூற்றாறு
மறக்கவில்லை எம் நெஞ்சம் இன்னும்
மறையவில்லை உமது நாமம்
மாவீரர் வரிசையில் நீர் – இப்போதும்
மாண்புடன் இருக்கின்றீர்
மலர்ந்துவிடும் தமிழீழம் – நாளை
மலர வைக்கும் உம்பெயரை ..

பிரிவால் துயருறும்:
தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி, மருமக்கள்,
பெறாமகன், உறவினர், நண்பர்கள்.

89, ஆமல்வீதி,
குருநகர். யாழ்ப்பாணம். [சி/2314]

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அ. கமலாதேவி (B. A.)

(அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 03 - 01 - 1948

மறைவு: 15 - 04 - 1981

திதி : 13 — 5 — 92

எங்கள் குடும்பத்தின் ஞானவிளக்காக, அன்பூற்றாக விளங்கி அபிவிருத்தி உத்தியோகஸ்தராக, சமூக பொருளாதார மாதர் குல முன்னேற்றத்திற்கும் அரும் பணியாற்றிய திருமதி கமலாதேவி (B. A) நாம் கதறிக் கலங்கும்படி சடுதியில் சிவகதி அடைந்து ஆண்டு பதினொன்றைக் கடந்துள்ளது. வேதனையில் உழலும் எங்களிதயங்களில் அன்னாரின் தரிசனம் கணம்தோறும் கிடைத்துத் தினம் நாம் செலுத்தி வரும் கண்ணீரஞ்சலியை நினைவு கூர்ந்து கண்ணீரோடு சிரம் தாழ்த்துகின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி,
மருமகன், மருமகள் சகோதரர்கள்,
சகோதரிகள் சிறியதந்தையர்கள்,
சிறியதாய்மார்கள், மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

''அக்கா அகம்'',
இணுவில். (20951)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தம் அவதானிப்பு நிலையமாக நீர்கொழும்பை பாவிக்கின்றனராம்

## பாதுகாப்பு வட்டாரங்களுக்குச் சந்தேகம்

கொழும்பு, மே 13
விடுதலைப் புலிகள் நீர்கொழும்புப் பகுதியை தமது அவதானிப்பு நிலையமாக [Out Post] பயன்படுத்துகின்றனரா என்ற சந்தேகத்தை பாதுகாப்பு வட்டாரங்கள் எழுப்பியிருப்பதாக ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு மாநகருக்கு அருகில் உள்ள நீர்கொழும்பு நகரில் வீதித் தடைகள், சோதனை முகாம்கள் இடையா. அங்கு தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர் அது அங்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சுதந்திரமாக நடமாட உதவுகின்றது என்றும், அதனால் அவர்கள் தாக்குதல்களை நடத்தும் ஏவுதளமாக நீர்கொழும்பைப் பயன்படுத்த முடியும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

நீர்கொழும்புப் பிரதேசத்தில் சர்வதேச விமான நிலையம் உட்பட கேந்திர நிலையங்கள் இருப்பதாகவும் —

நீர்கொழும்பில் இருந்து சிலாபம், புத்தளம் வழியாக யாழ்ப்பாணம் சென்றடைய முடியும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சோடாப் போத்தல்களில் யாழ்ப்பாணத்துக்குப் பெற்றோல் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒன்று நீர்கொழும்பில் வைத்து கண்டுபிடித்த சம்பவத்தையும் —

நீர்கொழும்பில் பாவிக்கப்படாத நிலையில் இருந்த மொரிஸ் மைனர் கார் ஒன்றைத் திருத்த யாழ்ப்பாணத்திலிருந்து மெக்கானிக்குகள் கொண்டு வரப்பட்ட சம்பவத்தையும் பாதுகாப்பு வட்டாரங்கள் தங்கள் சந்தேகங்களுக்கு ஆதாரமாகக் காட்டுகின்றன.

இதனைத் தொடர்ந்து நீர்கொழும்பில் இருந்து களனி வரையான பகுதிகளில் புலனாய்வுப் பணிகளில் இரண்டு புலனாய்வுப் பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தடா" சட்டத்தின் கீழ் கைதான 9 பேருக்கு பிணை

''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது பேரை பிணையில் விடுவிக்க விசேட நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் அனுமதி வழங்கினார்.

விடுவிக்கப்பட்டோரில் இருவர் இலங்கையர். எஞ்சிய ஏழு பேரும் இந்தியர்கள்.

பாஸ்போர்ட் இன்றி தமிழகத்தில் தங்கியிருந்ததற்காக கைது செய்யப்பட்ட நாகேந்திரம் [வயது 30], அவரது சகோதரி மகனான தனபாலசிங்கம் [வயது 23] ஆகியோரே விடுவிக்கப்பட்ட இரு இலங்கையருமாவர்.

புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த ஆறு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த — மக்கள் கலை, இலக்கிய கழகத்தைச் சேர்ந்த — வேறு ஆறு பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

புலிகளைப் பற்றி பொலீஸாருக்கு தகவல் கொடுத்தால் தொலைத்துவிடுவேன் என வெடிகுண்டைக் காட்டி மக்களை மிரட்டினார் என்று கூறப்படும் ஒருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வேதாரண்யத்தைச் சேர்ந்த சதாசிவம் என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார். [உ-த-3]

## ஐ. தே. க. உறுப்பினர் தொடர்பு?

கொழும்பு, மே 13
கறுப்புப் பூனைகள் பற்றி அரசின் மீது குற்றம் சுமத்தி பத்திரிகைகளுக்கு முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர்
[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரலாற்றுச் சான்றுகளை ஆவணப்படுத்த முயற்சி

யாழ்ப்பாணம், மே 13
தமிழீழத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், கட்டடங்களின் மாதிரிப் படங்கள், கிடைத்தோற்ற, பக்கத் தோற்ற வரைபடங்கள் போன்றவற்றை வரைந்து கோவைப்படுத்தும் முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அங்கமான தேசநிர்மாணிகளின் மதியுரையகம் ஈடுபட்டுள்ளது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சான்றுகள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்து வருவதால், தமிழீழம் அதனை இழந்து விடாமல் தடுக்கும் முகமாகவே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சங்கிலி மன்னனின் தோப்பு, யமுனா ஏரி ஆகியவற்றின் மாதிரிப் படங்களும், அமைவிடங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 21க்கு முன்னர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
21 ஆம் திகதி அத்திவாரக்கல் நடுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

அங்கு அன்று நடைபெறும் ராஜீவ் காந்தியின் முதலாவது நினைவுதினப் பொதுக் கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சந்தை விலைகள் (11—05—92 ஆம் திகதியன்று)

| பொருள் [கி. கிராம்] | திருநெல்வேலி | யாழ். பெரிய கடை | சுன்னாகம் | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|
| குத்தரிசி | 23-00 | 24-00 | 25-00 | 21-00 | 21-00 | 22-00 | — |
| கோதுமை மா | 13-00 | 13 00 | 14-50 | 13 00 | 13-00 | 15-00 | — |
| சீனி | 33 00 | 32-00 | 32-00 | 36-00 | 33-00 | 36-00 | — |
| உழுந்து | 46 00 | 45-00 | 40-00 | 40-00 | — | 48-00 | — |
| பயறு | 30-00 | 30-00 | 35-00 | 25 00 | 35-00 | 30-00 | — |
| கௌபி | 20-00 | 25-00 | 28 00 | 24-00 | 25-00 | 28-00 | — |
| செ. மிளகாய் | 72 00 | 78-00 | 75-00 | 70-00 | — | 80-00 | — |
| தக்காளி | 20-00 | 28-00 | 20-00 | 10-00 | 14-00 | — | — |
| கத்தரி | 25-00 | 24-00 | 18-00 | 18-00 | 20 00 | 20-00 | — |
| வெண்டி | 20-00 | 24-00 | 15-00 | 14-00 | 32-00 | 20-00 | — |
| பாகல் | 28 00 | 40-00 | 20-00 | 17-00 | 18-00 | 30-00 | — |
| புடோல் | 10-00 | — | 8-00 | — | 12-00 | 20 00 | — |
| பயிற்றங்காய் | 15 00 | 18-00 | 15-00 | 14-00 | 20-00 | 22-00 | — |
| கோவா | — | — | 3-00 | 6-00 | 4-00 | 6-00 | — |
| கரட் | 20 00 | 30-00 | 18-00 | 5-00 | 14-00 | 10-00 | — |
| பீற்றுட் | 4 00 | 12-00 | 5-00 | 7-00 | 4-50 | 7-00 | — |
| வாழைக்காய் | 18-00 | 25-00 | 20 00 | 30 00 | — | 20-00 | — |
| ப. மிளகாய் | 30-00 | 50 00 | 22-00 | 23-00 | 40-00 | 40-00 | — |
| வெங்காயம் | 11-00 | 18-00 | 14-00 | 7-00 | 12-00 | 15-00 | — |
| தேங்காய் | 15-00 | 18-00 | 18-00 | 15 00 | 16-00 | 18-00 | — |
| வாழைப்பழம் | 15 00 | 14-00 | 20-00 | 20-00 | — | 16-00 | — |
| பெரிய மீன் | 120-00 | 150-00 | 60-00 | — | 25-00 | 100-00 | — |
| சிறிய மீன் | 60-00 | 40-00 | 120-00 | — | 15-00 | 60-00 | — |
| முட்டை | 10-60 | 8-50 | — | 8-00 | 8-00 | 8 50 | — |
| மண்எண்ணெய் [லீற்றர்] | 23-00 | 24-00 | 25-00 | 26-00 | 25-00 | 25-00 | — |

★ கொடிகாமம் சந்தை விலை விவரம் கிடைக்கவில்லை.
தகவல் : தமிழீழ ஆய்வு நிறுவனம்

அளவெட்டி
கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
(எட்டாம் திருவிழா)

இன்று (13 - 05 - 92) வழமைபோல் நடைபெறுகின்ற திரு. ஜெயராஜின் சொற்பொழிவு இடம்பெற்று அதனைத் தொடர்ந்து:

வழக்காடுமன்றம்: குற்றக் கூண்டில் இராமன்.
நீதிபதி: திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
[அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்]

குற்றச்சாட்டு: வாலிவதை செய்தது குற்றம்.

வாதிகள்;
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. ஆறு. திருமுருகன்
திரு. தி. திருநந்தகுமார்

பிரதிவாதிகள்:
புலவர்- ஈழத்துச் சிவானந்தன்
திரு. க. குமாரதாசன்
திரு. த சிவகுமாரன்

- உபயகாரர்.

[20565]

YARL HALL கல்வி நிலையம்
93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

G. C. E. A/L 1994
கணக்கியல் புதிய பிரிவு ஆரம்பம்:
14-5-1992 மாலை 4-00 மணி

திரு. A. அகஸ்ரின் B. Com (Hon.)

G. C. E O/L 1992
விஞ்ஞானம் "இலத்திரனியல்" பகுதி ஆரம்பமாகிறது

இரா. செல்வ வடிவேல்

★ ஆண்டு 6 முதல் 11 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

★ இரா. செல்வவடிவேல்
★ S. கதிர்காமத்தம்பி
★ T. சௌந்தரபாண்டியன்
★ S. வாமதேவன்
★ A. அகஸ்ரின்
★ S. திருக்குமார்.

[20960]

விண்ணக வாழ்வின்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 08 — 04 — 1900
உதிர்வு: 13 — 04 — 1992

அமரர்
### வஸ்தியாம்பிள்ளை யுவக்கீம்பிள்ளை

திர்ப்பளிக்கும் தயாபரனே
மன்னிக்கும் மாபரனே
இமைப் பொழுதில் எமைவிட்டு
நீங்காத் துயில் கொண்டு
எம்மவரைத் தவிக்கவிட்ட
உம் அடியான் ஆன்மாவை
விண்ணுலகில் உம் நிழலில்
இரங்கியே ஏற்றருள்வீர்!

இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று [13-05-1992] மாலை 5-30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்;
மனைவி மைத்துனர்,
மருமகள், உற்றார், உறவினர்.

மாதகல்.

[20971]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. தே. க....

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடுகம்பொல வெளியிட்ட சத்தியக் கடதாசிகளை, அந்தாட்சிப் படுத்திய சமாதான நீதிவான் வடமேல் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருக்கும் திரு ரி. பி என். பொதோட்டா என்று தெரிய வந்துள்ளதாம்.

அவரின் வாக்குமூலத்தை உடுகம்பொல விவகாரம் குறித்து விசாரணை நடத்தி வரும் பொலீஸார் அண்மையில் பதிவு செய்தனர்.

உடும்பொலவின் சத்தியக் கடதாசிகளை ஹோட்டல் ''கலதாரி மெரிடியனில்'' வைத்து தான் அத்தாட்சிப் படுத்தியதாகவும், தாம் அவற்றை வாசித்து பார்க்கவில்லை என்றும், தற்போது பிரச்சினைக்குரிய இந்த சத்தியக் கடதாசிகள் தாம் அத்தாட்சிப்படுத்தியவை தானா என்பதை தன்னால் சொல்ல முடியாதிருப்பதாகவும் திரு. பொதோட்டா தனது வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார்.

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து நாகலிங்கம் (ரக்ரர்)

வேலணை 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகமுத்து நாகலிங்கம் [ரக்றர்] 05-05-92 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், இரகுநாதன் [மதிப்பீட்டு பரிசோதகர், மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்], ஜானகி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வை. தியாகராசா [ஆசிரியர், வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலை], திருமதி திலகமலர் இரகுநாதன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-05 92 அன்று [வேலணையில் நடைபெற்றன.

''சாயி டானு''
சம்பியன் லேன்,
கொக்குவில்.

தகவல்:
நா. இரகுநாதன்
[4855]

## சதாசிவம் சோமசுந்தரம்

உரும்பராய் திரு. ச. சோமசுந்தரம் [மேலதிக பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்] 23 - 04 - 92 இல் கொழும்பில் காலமானார். இவர் இரஞ்சிதமணியின் [ஆசிரியை, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்] அன்புக் கணவரும், வைகுந்தனின் [மாணவன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி] அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சதாசிவம் [முன்னாள் ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி], திருமதி கமலாம்பிகை சதாசிவம் [மண்டைதீவு] ஆகியோரின் அருமை மகனும், திருமதி லலிதாம்பிகை யதுகுலசிங்கத்தின் [ஆசிரியை கார்த்திகேயன் வித்தியாலயம் மண்டைதீவு] சகோதரரும், திரு. யதுகுலசிங்கம் [உடற் பயிற்சி ஆசிரியர், பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரி], திருமதி திருமணி பஞ்சலிங்கம் [U. S A] ஆகியோரின் மைத்துனரும், திரு. பஞ்சலிங்கத்தின் [U. S. A] சகலனும், காலஞ்சென்றவர்களான திரு. நாகலிங்கம் [அதிபர், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி], திருமதி மனோன்மணி நாகலிங்கம் [உரும்பராய்] ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02 - 05 - 92 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

''மனோ வாசா''
உரும்பராய்.

தகவல்:
க. யோகராஜா
[20969]

## திருமதி சிவபுராதனி சந்தனராசா

இல 570 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சிவபுராதனி சந்தனராசா 9 - 5 - 1992 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சந்தனராசாவின் [இளைப்பாறிய சிரேஷ்ட சுகாதார பரிசோதகர்] அன்பு மனைவியாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் கேட்டுகொள்கிறார்கள்.

தகவல்:
ச. சிறீஸ்கந்தராஜா
[மகன்]

[20975]

## வேலாயுதம் சித்திவினாயகர் (சித்தி)

வேலாயுதம் சித்திவினாயகர் (சித்தி) [நீர்ப்பாசனத் திணைக்களம், பொறியியலாளர் கிளிநொச்சி-Rock Eng.] 11-5-1992 இல் காலமாகிவிட்டார். இவர் மந்துவிலைச் சேர்ந்த வேலாயுதம் முத்துப்பிள்ளையின் மூத்த மகனும், கோப்பாய் தெய்வேந்திர குமாரசாமியின் மூத்த மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், விஷ்ணுகுமார், கோகிலகுமார், லேஜினி, கண்ணதாசன் ஆகியோரின் அருமைத் தந்தையும், கதிர்காமநாதன் (ஜேர்மன்), சாந்தமலர், சந்திராதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

முதலியார் வளவு,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[2096?]

## இன்று

மறைந்த சாரணர் மாவட்ட ஆணையாளர்களாகிய வரதலிங்கம், சச்சிதானந்தம் ஆகியோர் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி சாரணர் துருப்பும் கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர் துருப்பும் மோதுகின்றன. 3 ஆம் இடத்தை நிர்ணயிப்பதற்கான போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி சாரணர் துருப்பும் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி சாரணர் துருப்பும் மோதுகின்றன.

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று பாடும் மீன் அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த மெய்வல்லுனர் போட்டி, இன்றும் நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [ஒ-90]

★ ★ ★

நெல்லியடி, மே 13

கரவெட்டி கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2-30 மணியளவில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## குடாநாட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்தார்.

அவருடன் கொழும்பு மேற்றிராணியார் வண. நீக்லஸ் மார்க்ஸும் வருகை தந்திருந்தார்.

கலாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில அதிவண. றேமன் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

''இங்கு வந்து சென்ற பிக்குமாருக்கு மக்கள் படுகின்ற அவலங்கள் தெரிந்திருக்குமோ தெரியாது. அவர்கள் அரசின் உதவியுடன் ஹெலிக்கொப்டரில் — விமானத்தில் — வடபகுதிக்கு வந்து போகிறார்கள். ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டிருந்தால் எங்களுக்கும் அந்த வசதிகள் கிடைத்திருக்கும். ஆனால் மக்கள் படுகின்ற கஷ்டங்களை, அவலங்களை அனுபவ ரீதியாக பெறமுடியாமல் போயிருக்கும். உண்மையை அறிவதற்காகவே நாமும் கொம்படி வழியாக மிகுந்த கஷ்டங்கள் மத்தியில் இங்கு வந்தோம்— என்றார்.

திருமறைக் கலாமன்றத்தில் இருந்து ஆயர்கள் இருவரும் யாழ். கோட்டையை பார்க்க சென்றனர். (உ-51)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

### A/L 92 வினா-விடை

ஆரம்பம்: 14-5-1992

இ. நாகரிகம் பிரிவு I 10 மணி
இ. நாகரிகம் பிரிவு II 8 மணி
இ. சமயம் — 11 மணி

ஆசிரியர்: S. அருள்நங்கை

[சி/2408]

### போரில் காயமடையும்

# புலிகளுக்கு நானே மருந்து போடுவேன்!

## மதுரைக் கூட்டத்தில் ராமதாஸ்

சென்னை, மே 13

''போரில் காயமடையும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு நானே மருந்து போடுவேன்''.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் மதுரையில் நடந்த கட்சியின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

ராமதாஸ் மேலும் பேசுகையில், ''நான் தமிழன். எனது இரத்தமும் விடுதலைப் புலிகளின் இரத்தமும் ஒன்று. காயப்படும் விடுதலைப் புலிகளுக்கு நாம் கட்டுப்போட்டு, அவர்கள் உடலில் பாய்ந்த குண்டை எடுக்காமல் விட்டால் வேறு யார் உதவுவார்கள்?

போரில் காயமடையும் விடுதலைப் புலிகளே இனி எம்மிடம் வாருங்கள்''.

இப்படி ராமதாஸ் மதுரைப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார். [இ-3]

### ஆயுதக் கடத்தல் விவகாரம்:

# மற்றொரு சுவிஸ் பிரஜையும் பொலீஸாரால் கைது!

கொழும்பு, மே 13

கடந்த வெள்ளிக்கிழமை ஜாஎல வீடு ஒன்றில் இருந்து ஏராளமான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக மற்றொரு சுவிஸ் பிரஜையும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக இலங்கைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்த சுவிஸ் பிரஜை ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இரண்டாவது சுவிஸ் பிரஜை, முதலாவது சந்தேக நபரைச் சந்தித்து இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது சுவிஸ் சந்தேக நபரிடமிருந்து முக்கிய தகவல்களைத் தாம் ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளதாக பொலீஸார் கூறினார்கள்.

ஆயுதங்கள் விற்கப்பட்டமை தொடர்பாக ரசீது ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த ரசீது பிரெஞ்சு மொழியில் உள்ளது. அதனை பிரெஞ்சு மொழி தெரிந்த குழுவினர் பரிசீலனை செய்து வருகின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தார்கள்.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள தமது கூட்டாளிகளுக்கு 36 துப்பாக்கிகளை விற்றது தொடர்பான ரசீதே அது என்று சந்தேகநபர் கூறினார் என்று சொல்லப்படுகின்றது.

சந்தேகநபர் இலங்கைக்கு குறைந்தது 6 தடவைகள் வந்து சென்றுள்ளார் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இரகசிய ஆயுதக் குழு ஒன்றின் ஏஜண்டாக சுவிஸ் சந்தேகநபர் செயற்பட்டார் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

# 'சாவி' ஆசிரியர் கைது கருணாநிதி கண்டனம்

சென்னை, மே13

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'சாவி' வார இதழ் ஆசிரியர் திரு. சா. விசுவநாதன் (சாவி) நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இதழின் அட்டையில் பெண்ணின் படம் ஒன்றை ஆபாசமான முறையில் பிரசுரித்த குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. விசுவநாதனுடன் சேர்த்து பிரஸ்தாப பத்திரிகையின் இணை ஆசிரியரும் பதிப்பாளரும் கைது செய்யப்பட்டனர்.

இதேசமயம் —

எழுத்தாளர் சாவியைக் கைது செய்தது கண்டனத்துக்குரிய செயல் என்று தி. மு க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

முரசொலி ஆசிரியர் செல்வத்தைக் கைது செய்தது சட்டசபைச் சரித்திரத்திலேயே இடம்பெற்ற முதலாவது சம்பவம் என்று திரு. கருணாநிதி வர்ணித்தார். (ஒ-எ)

### கொழும்பிலிருந்து இரத்தினபுரிவரை

# மனித சங்கிலிப் போராட்டம் எதிரணியினர் நடத்துவர்!

கொழும்பு, மே 13

மனித சங்கிலி போராட்டம் ஒன்றை கொழும்பிலிருந்து இரத்தினபுரி வரை எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடத்த எதிர்க்கட்சிகள் திட்டம் வகுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு - கதிர்காமம் பாதயாத்திரையைத் தொடர்ந்து இம் மனித சங்கிலி போராட்டத்திலும் சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, தேச விமுக்தி ஜனதா பக்ஷய ஆகியன கலந்து கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த அரசியல் கட்சிகள் இதுகாலவரை நாடே கண்டிராத இரண்டு வித ஆட்சேப போராட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளன.

ஒரே சமயத்தில் நடத்தப்படவுள்ள இவ்விரு போராட்டங்களுக்கும் ''சப்தபூஜா'', ''ஜனகோஷ'' என்று பெயரிடப்பட்டுள்ளன.

(ஒ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org